**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 133/2018 .** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : பிரியங்கா | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.12.2023

---

**முதல் விசாரணை:**

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன், எனக்கு அரசு சாட்சிகளை தெரியும், விபத்தில் இறந்து போன நபர் எனது தந்தை மகேந்திரன் ஆவார். எனது அப்பா 20.08.2016 ம் தேதி மாலை 6.30 மணியளவில் எனது அப்பா அவருடைய டிவிஎஸ் ஸ்கூட்டி ஜெஸ்ட் இருசக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து வெளியே சென்றார். அப்போது சுமார் 7.00 மணியளவில் சாட்சி துரை என்பவர் எனது போனிற்கு எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக சொன்ன தகவலின் பேரில் நான் உசிலம்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்று எனது அப்பாவை பார்த்தபோது அவர் தலையில் வலது பக்கம் நெற்றிக்கு மேலும் பின்தலையிலும் அடிபட்டிருந்தது. நான் சாட்சி துரையிடம் விசாரித்த போது உசிலம்பட்டி மதுரை ரோட்டில் SOR ேஹாண்டா ஷோ ரூம் அருகே அவர் ராமர் மற்றும் பிரவீன் ஆகியோர் இடம் பேசி கொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்காக எனது அப்பா இருசக்கர வாகனத்தில் ரோட்டின் ஓரமாக சென்ற போது எதிர் திசையிலிருந்து வந்த அரசு பேருந்து வேகமாக வந்து லாரியை முந்துவதற்காக வலது புறம் ஏறி வந்து அவர் மீது மோதிவிட்டதாக சொன்னார். எனது அப்பா சம்பவ இடத்திலேயே இறந்து போய்விட்டார். அன்றைய தினம் பேருந்து ஓட்டிய நபர் தேனி சேர்ந்த முத்தையா என்று தெரியவந்தது. அன்றைய தினமே நான் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரி மீது புகார் அளிக்க காவல் நிலையம் சென்றுவிட்டேன். **என்னிடம் காட்டப்படும் புகார் மனு அ.சாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு விபத்து ஏற்பட்டதாக போன் வந்தபோது சுமார் இரவு 7.00 மணி என்றால் சரிதான். என்னுடைய அப்பாவிற்கு இறக்கும்சமயத்தில் 49 வயது இருந்தது. எனது அப்பாவிற்கு மது அருந்தும்பழக்கம் இல்லை. தகவல் சொன்ன துரை சத்தம் கேட்டு போய் சம்பவத்தை பார்த்ததாக சொன்னார் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும் போது இரவு 8.00 மணிக்கு இருக்கும். புகாரை நான் எழுத வில்லை என்னிடம் கேட்டு எழுதினார்கள். புகார் எழுதிய நபர் யார் என்று எனக்கு ஞாபகமில்லை. அவர் எழுதி கொடுத்த புகாரில் நான் கையெழுத்து போட்டேன். புகாரில் உள்ள விபரம் எனக்கு தெரியும், நான் சொல்லி தான் எழுதினார்கள். சம்பவ நடந்த அன்றைய தினமே இரவு 8.00 மணிக்கு நான் புகார் கொடுத்துவிட்டேன். நான் புகார் கொடுத்தற்கு எந்த ரசீதும் நான் பெறவில்லை. சம்பவ நடைபெற்ற தேதி 20.08.2016 ம் ஆகும். சம்பவ நடந்த அன்று இரவு நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால்சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை எழுதி மறுநாள் சென்று நான் புகார் கொடுத்தேன்என்றால் சரியல்ல. நான் உண்மை சம்பவத்தை மறைத்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரியின் ஆஜாக்கிரதையாலோ கவனக்குறைவாலோ விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றும் விபத்து சமயத்தில் எனது அப்பா பேருந்து வருவதை கவனிக்காமல் சாலையை திடீரென குறுக்கே கடந்ததால் தான் தவிர்க்க இயலாதபடி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

S.d./Priyanka

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.